

விருதுநகரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் திராவிட கழகத் தலைவர் ஆசிரியர் கி வீரமணி விருதுநகர் தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் வி. விஜயபிரபாகரனை ஆதரித்து அல்லம்பட்டி வாட்டர் டேங்க் அருகில் பிரச்சாரம் மேற்கொண்டார். இதில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தோழமைக் கட்சி தலைவர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் ஆதிபட்டி பூதிப்புரம் ஆகிய ஊர்களில் கழகஅரசு செய்த திட்டங்களை சொல்லி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் முன்னாள் எம்.பி. ரவீந்திரநாத் அய்யப்பன். லட்சுமணன். பேரூர் செயலாளர். கவியரசு மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி தமிழகத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கப் பாக்கிறது என்று எஸ்.பாறைப்பட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு. எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையில் தான் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் என்று ஐ.பெரியசாமி பொதுமக்கள் மத்தியில் பெருமிதமாக பேசி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அருகில் ஒன்றிய செயலாளர்கள் ராமன், ராஜேந்திரன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வெள்ளக் கோட்டை மற்றும் பிள்ளையார் கோவில் பகுதியில் முதல் நாள் பிரச்சாரத்தில் திராவிட மாடலின் மக்கள் நலத்திட்டங்களைக் கூறி பொது மக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரித்தார் தி.மு.க. வேட்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன். உடன் அருப்புக்கோட்டை நகர் மன்ற தலைவர் சிவப்பிரகாசம், நகர செயலாளர் ஆர்.கே.மணி உள்ளனர்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழித் தொகுதிக்கு உட்பட்ட காரியாபட்டி கிழக்கு ஒன்றியத்தைச் சார்ந்த அல்லாளப்பேரி, குறிஞ்சாக்குளம், ஆவாரம்பட்டி ஆகிய பகுதிகளில் திருச்சுழி தி.மு.க. வேட்பாளர் தங்கம் தென்னரசு மக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரித்தார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ஐந்தாவது முறையாக போட்டியிடும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கே.ஆர்.பெரியகருப்பனை சிவகங்கை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம் பொன்னாடை அணிவித்து வாழ்த்துக் கூறினார். உடன் மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி உட்பட நிர்வாகிகள் உள்ளனர்.





மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டனி கட்சியின் தி.மு.க. வெற்றி வேட்பாளர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் திருச்செந்தூர் சட்ட மன்ற தொகுதியில் வெற்றி சின்ன மாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு திருச்செந்தூரில் பிரச்சாரம் மேற்கொண்டார் மக்கள் ஆரத்தி எடுத்து அமோகமாக வரவேற்றனர். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர் மன்றத் தலைவர் சிவ ஆனந்தி ரமேஷ், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர்,நகர செயலாளர் வாள் சுடலை, நகர் மன்ற உறுப்பினர்கள் மணல்மேடு சுதாகர், செந்தில், ரேவதி அசோக், கௌரி கார்த்திகேயன், ஆனந்த் ராமச்சந்திரன், தயா பாண்டியன், தோப்பூர் சுரேஷ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தொகுதிக்குட்பட்ட சின்ன உலகானி, பெரிய உலகானி உள்ளிட்ட கிராமப் பகுதிகளில் பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என திரளானோர் பங்கேற்றனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி, விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம்,குளத்தூரில் உள்ள வியாபார பெருமக்களிடம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் ஜீ. வி.மார்க்கண்டேயன் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, இம்மானுவேல், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயற்குழு உறுப்பினர் புவிராஜ், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒன்றிய செயலாளர் சபாபதி தே.மு.தி.க. ஒன்றிய செயலாளர் தங்கச்சாமி, கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி,வேட்பாளர் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் இராமநாதபுரம் தெற்கு மற்றும் திருப்புல்லாணி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு மேற்கொண்டு. மக்களை வீடு தோறும் சந்தித்து, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கோரி தீவிரமாக வாக்கு சேகரித்தார். மக்களின் உற்சாகமான வரவேற்பும், பேராதரவும் வெற்றிக்கான நம்பிக்கையை மேலும் உறுதியளித்து. நிச்சயம் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்ற உறுதியுடன் பிரச்சாரம் தொடர்கிறது.




நெல்லை மாவட்டம் நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ரூபி ஆர்.மனோகரன் நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சிந்துவிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.உடன் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல்,முன்னாள் ஒன்றிய அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன், நெல்லை ராபர்ட் புரூஸ் எம்.பி. பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன் ஆகியோர் உள்ளனர்.




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.மாங்குடி தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ்வெங்கட்டிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். உடன் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் சென்றார்கள்.